# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 243/2004**

பெயர்: **பொன்னுசாமி** நாள்: 19.10.2023

பி.வா.சா.2 – வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

பி.வா.சா.2 – சண்முகபிரியா - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 2.31</u>

ரத்தினசாமி அரசாங்கத்தின் பேரில் எழுதப்பட்டதாக சொல்லப்படும் உயில் குறித்த விபரம் 2006ம் ஆண்டு ஜுன் திங்கள் தெரிய வந்தது. துரைசாமி கூறியதின் அடிப்படையில்தான் எனக்கு உயில் ஆவணம் குறித்து தெரிய வந்தது. நான் எல்லபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். வாதியும், 4 முதல் 6 வரையிலான பிரதிவாதிகளும் எல்லபாளையத்தில்தான் குடியிருந்து வருகிறார்கள். எல்லபாளையத்தில் சுமார் 100 வீடுகள் உள்ளது. ரத்தினசாமியின் இறப்பிற்கு பின்னிட்டு மூன்று வழக்குகளும் கடந்த 1999ம் ஆண்டே தாக்கல் செய்யப்பட்டு விட்டது. அசல் வழக்கு எண் 153/1999, 224/1999 மற்றும் அசல் வழக்கு எண் 226/1999 ஆகிய வழக்குகள் நிலுவையில் இருந்த விபரங்கள் உள்ளூர்க்காரரான எனக்கு நன்கு தெரியும் என்றாலும், ஆனால் இந்த வழக்கிற்காக மேற்படி வழக்குகள் குறித்த விபரங்கள் 2006ம் ஆண்டுதான் தெரிய வந்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல.

2) பி.வா.சா.ஆ.15 ஆவணப்படியான அரசாங்கத்தின் பேரிலான உயில் ஆவணத்தை யார் வாங்கினார்கள் என்றால், துரைசாமி வாங்கினார். பி.வா.சா.ஆ.15 ஆவணத்தின் நகலை நான்தான் வாங்கியதாக உள்ளது. பி.வா.சா.ஆ.1ன் நகல் பெற்ற பின் நான் அதை படித்து பார்த்தேன். பி.வா.சா.ஆ.15 ஆவணத்தில் வி.சிவபிரகாசம், வழக்கறிஞர்தான் முதல் சாட்சியாக கையொப்பமிட்டுள்ளார் என்றால், சரிதான். உயில் ஆவண வாசகத்தில் முத்திரைத்தாள் இல்லாமல் எழுதப்பட்டதாகத்தான் குறிப்பு உள்ளது என்றால், சரிதான். முதல் சாட்சியாக கையெழுத்திட்டுள்ள வி.சிவபிரகாசம் யார் என்று தெரிந்து கொண்டேனா என்றால், வக்கீல் என்று சொன்னார்கள். வழக்கறிஞர் சிவபிரகாசத்திற்கும், ரத்தினசாமிக்கும் எத்தனை ஆண்டுகளாக, எந்த வகையில் அறிமுகம் என்ற விபரத்தினை தெரிந்து கொண்டேனா என்றால், இல்லை.

3) வழக்கறிஞர் வி.சிவபிரகாசத்திடம் இளம் வழக்கறிஞராக பணியாற்றியவர்தான் திரு.எம். ரங்கசாமி, வழக்கறிஞர் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. துரைசாமியிடமாவது வி.சிவபிரகாசம், வழக்கறிஞரை பற்றி தெரிந்து கொண்டேனா என்றால், கேட்டேன். வழக்கிற்காக சென்று வரும் வகையில் தெரியும் என்று சொன்னார். வழக்கறிஞர் எம். ரங்கசாமிதான் ரத்தினசாமி இறக்கும் வரையில் அவரது வழக்குகளை நடத்தி வந்தார் என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.15 ஆவணத்தில் ரத்தினம் என்று தமிழில் கையொப்பம் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் முதன்மை சாட்சியத்திலும் வழக்குகள் குறித்த விபரங்கள் 2006 ம் ஆண்டில்தான் தெரிய வந்ததாக குறிப்பிட்டுள்ளேன். நானும் வாதி நல்லமுத்துவும் 2006 ம் ஆண்டு வரை சுமூகமான உறவில் இருந்தோம்.

4) பி.வா.சா.ஆ.26 ஆவணப்படியான புகாரினை நேரில் கொடுத்தேனா அல்லது கடிதம் மூலம் அனுப்பினேனா என்றால், நேரில் கொடுத்தேன். நேரில் கொடுத்ததற்கான ரசீது ஏதேனும் தேவூர் காவல் நிலையத்திலிருந்து பெற்றேனா என்றால், இல்லை. பி.வா.சா.ஆ.26 ஆவணத்தில் பொன்னுசாமி மற்றும் ஊர்பொதுமக்கள் என்று அனுப்புதலில் குறிப்பிட்டிருந்த போதிலும், கையொப்பம் என்னைத் தவிர வேறு யாரும் போடவில்லை என்று சொன்னால், சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.26 ன்படியான புகாரின் அடிப்படையில் மேல்நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டதா அல்லது ஏன் மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது குறித்து முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ளேனா என்றால், இல்லை. பி.வா.சா.ஆ.26 ஆவணப்படியான புகாரின் அடிப்படையில் நடவடிக்கை இல்லை என்பதற்காக தனி நபர் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால், இல்லை.

5) பி.வா.சா.ஆ.26 ஆவணத்தை நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையுடனோ அல்லது என்னை தரப்பினராக சேர்க்கக்கோரிய மனுவுடனோ தாக்கல் செய்தேனா என்றால், தாக்கல் செய்தேனா என்று எனக்கு ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.26 ஆவணம் நான் வழக்கிற்காக தன்னிச்சையாக தயார் செய்த ஆவணம் என்பதால்தான் தேவூர் காவல் நிலையத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. பி.வா.சா.ஆ.26 ஆவணப்படியான புகார் ஏதேனும் நான் கொடுக்கவில்லை என்பதால்தான், எதிர் வழக்குரையுடனோ அல்லது நான் தரப்பினராக சேர்க்கக்கோரி தாக்கல் செய்த மனுவுடனோ சேர்த்து தாக்கல் செய்யவில்லை என்று

சொன்னால், சரியல்ல. பி.வா.சா.ஆ.26 ஆவணம் முன்தேதியிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணம் என்பதால், அதை ஒரு சாட்சியாக சட்டப்படி ஏற்க முடியாது என்று சொன்னால், சரியல்ல.

6) நான் முதன்மை சாட்சியத்தின் ஆவணப்பட்டியலில் 7 வது ஆவணமாக குறிப்பிட்டுள்ள புகாரை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. அதேபோல் 8 வது ஆவணமாக குறிப்பிட்டுள்ள CSR ரசீதை தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. குறியீடு செய்யாத ஆவணங்களை முதல் விசாரணையில் குறிப்பிட்டு நீதிமன்ற கவனத்தை திசை திருப்பியுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. பி.வா.சா.ஆ.27 ஆவணப்படியான புகார் மனுவில் அனுப்புதலில் பொன்னுசாமி மற்றும் ஊர்பொதுமக்கள் என்று குறிப்பிட்டுள்ளபோதிலும், அதில் நான் மட்டுந்தான் கையொப்பம் போட்டுள்ளேன் என்று சொன்னால், சரிதான்.

7) பி.வா.சா.ஆ.29 ஆவணம் நான் நேரில் கொடுக்கப்பட்டதா அல்லது தபால் மூலம் அனுப்பப்பட்டதா என்று சொன்னால், அது நேரில் கொடுக்கப்பட்ட ஆவணமாகும். அவ்வாறு நேரில் கொடுக்கப்பட்டது என்பதற்கான ஆவணத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. வருவாய் ஆய்வாளரிடம் மேற்படி புகாரை நேரில்தான் கொடுத்தேன். வருவாய் ஆய்வாளரிடம் நேரடியாக கொடுக்கப்பட்டதற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. பி.வா.சா.ஆ.29 ஆவணமே தன்னிச்சையாக மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னாலும், அதனால்தான் நேரடியாக கொடுக்கப்பட்டதாக சொல்வதை நிரூபிப்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. பி.வா.சா.ஆ.29 புகாரின்பேரில் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் பேரில் நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால், இல்லை. பி.வா.சா.ஆ.29 ஆவணம் வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்பதால்தான், அதன்பேரில் மேல்நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லையென்று சொன்னால், சரியல்ல.

8) பி.வா.சா.ஆ.30 ஆவணப்படியான புகாரினை நேரில் கொடுத்தேனா என்றால், தபால் மூலம் அனுப்பினேனா என்றால், நேரிலும் கொடுத்தேன், தபால் மூலமும் அனுப்பினேன். நேரில் கொடுத்ததற்காகவும், தபால் மூலம்

அனுப்பியதற்காகவும் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. பி.வா.சா.ஆ.30 ஆவணமே தன்னிச்சையாக மோசடியாக முன்தேதியிட்டு தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னாலும், அதனால்தான் நேரடியாக கொடுக்கப்பட்டதற்கும், தபால் மூலம் அனுப்பியதற்கும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. வருவாய் கோட்டாட்சியர் அதன்பேரில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னாலும், சரியல்ல.

9) பி.வா.சா.ஆ.31 ஆவணப்படியான புகாரின் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதற்காக தனிநபர் புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால், இல்லை. வாதியின்மீது அளித்த அனைத்து புகார்களுமே வழக்கு சொத்திலிருந்த மரங்களை வெட்டி விட்டார்கள் என்பதற்காக கொடுக்கப்பட்டது என்றால், சரிதான். வழக்கு சொத்தில் மரங்கள் இருந்தன என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். எவ்வகையான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால், நிழற்படம் மற்றும் மூல நிழற்படம் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்து நிழற்படத்தில் வழக்கு சொத்திற்கான நிழற்படங்கள்தான் என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. நிழற்படங்கள் யாரால், எந்த தேதியில் எடுக்கப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும், முதல் விசாரணையில் அதுகுறித்து குறிப்பிடப்படவில்லை என்றாலும், சரிதான். நிழற்படத்தை யார் எடுத்தார் என்ற விபரத்தினையும், அதற்கான ரசீதினையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரிதான்.

10) நிழற்படங்கள் அனைத்திலும் வெட்டப்பட்ட மரங்கள் மட்டுந்தான் உள்ளது என்றாலும், அதை யாரால் வெட்டப்பட்டது என்பதற்கான எந்த சான்றும் இல்லையென்று சொன்னால், சரிதான். நிழற்படங்கள் வழக்கு சொத்து சம்பந்தப்பட்டவை அல்ல என்று சொன்னாலும், வாதி பெயரில் அவதூறு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டவை என்று சொன்னாலும், சரியல்ல. அதனால்தான் அதை யார் எடுத்தார்கள் என்பதற்கான சட்டப்படியான சான்று ஆவணத்தை இந்த நீதிமன்றத்தின் முன் அளிக்கவில்லையென்று சொன்னால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரைக்கான தகவலை துரைசாமி என்பவர்தான் கூறினார். நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை பத்தி 6 ல் ஊர் மூப்பனாக செயல்படுவதற்கான கணக்கு வழக்குளையும், ஆவணங்களையும் ஒப்புவிக்க தயாராக

உள்ளேன் என்று கூறியுள்ளேன் என்றால், சரிதான். ஊர் மூப்பன் என்பதற்கான கணக்கு வழக்குகளையோ அல்லது மற்ற ஆவணங்களையோ முதல் விசாரணையில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் அளித்த ரசீதை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.23, 24 ஆவணங்களில் ஊர் மூப்பன் என்பதற்கான குறிப்புகள் எதுவும் இல்லையென்று சொன்னால், சரிதான். வரவு செலவு கணக்கு நோட் புத்தகங்களை நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

11) நான் பி.வா.சா.ஆ.33 ஆவணமான தாக்கல் செய்துள்ள அறிவிப்பு 2006 ம் ஆண்டு 8 மாதத்திற்கு சம்பந்தப்பட்டது என்றால், சரிதான். இந்த ஆவணம் நான் வழக்கு தரப்பினராக சேர்க்க மனு தாக்கல் செய்தற்கு பின்னிட்டது என்று சொன்னால், சரிதான். மனு தாக்கல் செய்வதற்கு முன்பு மேற்படி கோவிலுக்கு ஊர் மூப்பனாக நான் இருந்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. பி.வா.சா.ஆ.33 ஆவணம் வழக்கிற்காக நான் தன்னிச்சையாக தயார் செய்து தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால், சரியல்ல. உண்மையில் மேற்படி எல்லபாளையம் மலையடி முனியப்பன் கோவிலுக்கு ஊர் மூப்பனாக செயல்பட்டிருந்தால் மேற்படி கோவிலின் வரவு செலவு கணக்குகளையாவது முதல் விசாரணையுடன் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால், சரியல்ல.

வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க பி.வா.சா.2 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 03.34</u>

ஒப்பம்/பொன்னுசாமி

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.